12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்
அவர்கள் அருளியது

# சித்தர் இராமாயணம் - V

# விசும்பாத்திறர் புராணம்



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானுச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.**


## இந்து இலக்கியக் கழக வெளியீடு

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 **சித்திரை** மாதம்.

காணிக்கை: ரூ 10/-

# <u>உள்ளுறை</u>

**1. சித்தர் இராமாயணம் - ஏழாம் பாகம். (விசுவாமித்திரர் புராணம்).**

**2. சித்தர் இராமாயணம் - சிறு குறிப்புக்கள்.**

**3. குருபாரம்பரியம் தரும் வசிட்டர் வரலாறு.**

**4. "சீதையின் கற்பை இராமன் சந்தேகப்படவே இல்லை!" - இ.ம.இ. வெளியீடு.**

## <u>கால நிலை விளக்கம்:</u>

**<u>கிரேதா யுக</u>**த்தில் (17,28,080 ஆண்டுகள்) சிவ புராணங்கள், முருக புராணங்கள், சத்தி புராணங்கள், மா புராணங்கள்... என்று பலவும் நிகழ்ந்தன. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்தது.

**<u>திரேதா யுக</u>**த்தில் (12,90,000 ஆண்டுகள்) இராமாயணம் நிகழ்ந்தது. சூரியகுலத்தார் காகபுசுண்டர்கள் [காக்கையர்கள்] ஆட்சி ஓங்கியது. மானுடர்-அரக்கர் போர்க் காலம்.

**<u>துவாபர யுக</u>**த்தில் (8,64,000 ஆண்டுகள்) தோற்றத்தார்கள் (அவதாரம்), பதிலிகள், அரக்கர் வாரிசுகள், தேவ வாரிசுகள், மாயாசத்தியாளர்கள்... முதலியோருக்கும் மானுடருக்கும் போர் நிகழ்ந்தது. இது சந்திர குலத்தாரின் ஆட்சி. பதினெண்சித்தர்களில் குருபீடமேற்ற கருவூரர் வாரிசுகள் 'குருகுலத்தார்' ஆட்சிக் காலம்.

இந்த மூன்று யுகங்களும் கடந்து, கலியுகம் பிறந்து 2000 ஆண்டுகள் கழித்தே வடஆரியர் இந்தியாவுக்கு வந்தனர். கலியுகத்தில்தான் வடஆரியர் (பால் வண்ணம், பழுப்பு மேனியர்) இந்தியா வந்தனர். கலி பிறந்து மூவாயிரமாண்டு கழித்தே 'தெய்வத் தமிழுக்கே' தீங்கு செய்யச் சமசுக்கிருதம் பிறப்பிக்கப்பட்டது.

## சித்தர் இராமாயணம் ஏழாம் பாகம்

# சித்தர் இராமாயணம் = விசுவாமித்திரர் புராணம் = யக்ஞவல்லி இராமாயணம்.

1) நாட்டு வழக்கில் சித்தர் இராமாயணம் செல்வாக்குப் பெற முடியாமல் போய்விட்டது. எனவே, விசுவாமித்திரர் புராணம் பற்றியும் எடுத்துக் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. விசுவாமித்திரர் யக்ஞவல்லியைப் போல் எந்தப் பதவிக்கும் ஆசைப்படாமலும்; எந்த அரசகுலத்தவருடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளாமலும்; எவர் கூடவும் தகராறு வைத்துக் கொள்ளாமலும் வாழ்ந்தவரில்லை. இவருடைய வாழ்க்கை ஆரம்பம் முதல் இறுதி வரை பொருளுக்காகவும், போக இன்பங்களுக்காகவும், புகழுக்காகவும், பதவிக்காகவும் போரிட்டதாகவே இருக்கிறது. இவர் இறுதிவரை தான் விரும்பிய எதையும் முழுமையாகவே சாதிக்கவில்லை. இவர் அரசகுலத்துக்குரிய வீர உணர்வும், தீர உணர்வும், தலைமைப் பண்பும், போரிடும் பண்பும், பிடிவாதப் பண்பும், சூழ்ச்சித் திறனும் உடையவராகத்தான் வாழ்ந்தாரே தவிர ஒரு தவசியாகவோ, ஓர் அருளாளராகவோ முழுமையாக வாழவில்லை.

இவருடைய வாழ்க்கை முழுதுமே முரண்பாடுகளும், குழப்பங்களும், மாறுபாடுகளும், போட்டி பொறாமைகளும், ஆத்திர அவசரக் கோலங்களும், எதிர்பாராத விபரீத விளைவுகளும்தான் விளைந்திருக்கின்றன. இவரைக் கண்டு எல்லோருமே அச்சமும்,

வெறுப்புமே அடைந்திருக்கின்றனர். இவர் மண்ணுலகத்தவர்களுக்கு இடையிலும், விண்ணுலகத்தவர்களுக்கு இடையிலும் மிகப் பெரிய செல்வாக்கைக் கடைசி வரை பெற்றிருந்திருக்கிறுர். எனவேதான், இவருடைய புராணம் மண்ணையும், விண்ணையும் இணைத்து விளக்குகின்ற சிறப்புமிக்க முதன்மை வாய்ந்த '**மா புராணம்**' என்ற பெயரைப் பெற்றது. இதைப் பற்றிச் சங்க கால இலக்கியங்கள், இலக்கணங்கள் பல குறிப்புக்களை வழங்குகின்றன.

2) தமிழிலக்கிய உலகில் பெரும்பாலானவர்களுக்கு '**மா புராணம் என்பது விசுவாமித்திரர் புராணம்தான்**' என்பது தெரியவே தெரியாது. அதனுல்தான், இராமாயண காலத்தில் வசிட்டரோடு போராடி வெற்றி பெற்ற விசுவாமித்திரரின் புகழ் தமிழிலக்கியங்களில் சிறப்பான இடத்தைப் பெற முடியாமல் போய்விட்டது. மேலும் யக்ஞுவல்லி காலத்தில் வாழ்ந்த 18 வால்மீகிகளும், 18 கம்பர்களும் தமிழில் எழுதிய இராமகாதை, இராமகாப்பியம், இராமகவிதை, இராமன் செலவு, இராம இராவணப் போர், சூரிய குல வரலாறு, சூரிய குலப் பாரம்பரியம், சூரிய குலச் செல்வம், சனகர் காதை, தசரதன் காதை, இராவண காதை, பல கீதைகள் முதலியவை புதையுண்ட நிலவறைச் செல்வங்கள் ஆகி விட்டன, பழங்கதைகள் ஆகி விட்டன.

கலியுகத்தில் 3000 ஆண்டுகள் கழித்துத் தோன்றிய **சங்கப் புலவன் ஆதிகவி வால்மீகி** வடஆரியரின் சமசுக்கிருத மொழியில் எழுதிய இராம காதைதான் மூல இராமாயணமாக ஏற்றுப் போற்றப் படும் நிலை உருவாகி விட்டது. இதனுல், தமிழ்ப் பண்பாடு, நாகரீகம், இலக்கியம் முதலிய அனைத்தும் மாபெரும் இருட்டடிப்பிற்கும், இழப்பிற்கும், தவருன முடிவுகளுக்கும், சிதைவுகளுக்கும் உள்ளாயிற்று. எனவே, கலியுகத்திற்கு முன்பு இரண்டு யுகங்களாகத் தமிழ்மொழியில் இருந்திட்ட எண்ணற்ற புராணங்களும், கதைகளும், காதைகளும்,

கவிதைகளும், கீதைகளும், ... மறக்கப் பட்டும், துறக்கப் பட்டும் தமிழினத்திற்கு மிகப் பெரிய இழப்புக்களை ஏற்படுத்தி விட்டன.

இவற்றையெல்லாம் ஈடுகட்ட வேண்டுமென்றால் தமிழ்மொழியில் சித்தர் இராமாயணம், விசுவாமித்திரர் புராணம், வசிட்டர் புராணம், சனகன் புராணம், இராவணன் புராணம், ... முதலிய திரேதகா யுகத்துப் புராணங்கள் பலவும்; இதற்கு முந்திய கிரேதகா யுகத்துக்குரிய சிவபுராணம், சத்தி புராணம், திருமால் புராணம், பிறமண் புராணம், நாரதர் புராணம், இயமன் புராணம், இந்திரன் புராணம், தேவேந்திரன் புராணம் எனப்படும் பதினெட்டு (18) புராணங்களும்; துவாபர யுகத்துக்குரிய ஐவர் புராணம், நூற்றுவர் புராணம், கண்ணன் புராணம், துரோணர் புராணம், வீடுமர் புராணம், அருச்சுனன் புராணம், வியாசர் புராணம், தன்வந்திரி புராணம், சித்தர் பாரதம் எனப்படும் தன்வந்திரி பாரதம், ... முதலிய பதினெட்டுப் புராணங்களும்; கலியுகத்துக்குரிய கடைச்சங்க காலத்துக்குரிய இலக்கியங்களும், இலக்கணங்களும், ... மிகத் தெளிவாகவும், முறையாகவும், விளக்கமாகவும் அச்சிட்டு வெளியிடப் படல் வேண்டும்.

3) திரேதகா யுகத்தில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றிய போதும் இராம கதை, இராம காதை, இராம கவிதை, இராம கீதை எனும் நான்கின் கூட்டாகப் பிறந்த 'இராமன் பிறப்பு', 'இராமன் தோற்றம்', 'இராமன் சரிதம்', 'இராமன் வரலாறு', ... என்று பல பேர்களால் அழைக்கப் பட்டு இறுதியில் 'இராமாயணம்' அல்லது 'இராம காவியம்' அல்லது 'இராமாவதாரம்' என்று அழைக்கப்படும் ஒரு பெரிய இலக்கியம்தான் வாழுகின்றது. இதனை 'இராம புராணம்', 'சீதை புராணம்', 'தசரத புராணம்', 'இலவ குச புராணம்', 'இராவண புராணம்', 'வண்டமர் குழலி புராணம்', 'கும்பகன்னன் புராணம்', 'வாலி புராணம்', 'அனுமன் புராணம்', 'சனகன் புராணம்', 'விசுவாமித்திரர் புராணம்', 'வசிட்டர் புராணம்',

‘யக்ஞவல்லி புராணம்’ ... என்று எண்ணற்ற புராணங்கள் மூலம் அறிகிறோம்.

இவற்றில் ஒரு சில புராணங்கள் தவிர மற்றவையெல்லாம் வெளிநாட்டுத் தமிழ்க் குடும்பங்களிலும், ஓலைச் சுவடிகளாகவும் வாழுகின்றன. ஆனால், சித்தர் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களாலும், சித்தர் காகபுசுண்டர் வழிவந்த கரூர் வட்ட முடிகணத்துக் காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்களாலும், கரூர் பெரும்புலவர் மருதையா பிள்ளை அவர்களாலும், தஞ்சை முத்து வீரத் தென்கொண்டார், இராசாதிராசக் காளிங்கராயர், அய்யாவுச் சேதிராயர், விசயாலயப் பழங்கொண்டார், நெல்லை கனகசபைப் பிள்ளை, திருச்சி ப.வே. மாணிக்க நாயக்கர், ஈரோடு வெங்கட்ட நாயக்கர், கோயமுத்தூர் சின்னையா கவுண்டர், வீரய்யா மன்றாடியார், உ.வே.சாமிநாதய்யர், இராமநாதபுரம் செகவீர பாண்டியர், பொன்னுச்சாமித் தேவர், முத்துக் கிருட்டிண அம்பலம், சோழவந்தான் பிச்சைமுத்துச் சேர்வை, திருச்சி கோவிந்தராசு நாயுடு, கும்பகோணம் இராமகிருட்டிண ஆச்சாரியார், கருப்பையா ஆச்சாரியார், செங்குன்றம் (சென்னை) வைத்தியர் அழகப்பன், காரைக்குடி அ.சொ.ந.க. இராமு செட்டியார், மு.அண்ணாமலைச் செட்டியார், சேலம் ஆத்தூர் ரெட்டியார், ... முதலியவர்களாலும் பல புராணங்கள் தாள்களில் எழுதி கோப்புக் கோப்பாக பாதுகாக்கப் படவும், படித்துப் பரப்பப் படவும் நேரிட்டதால்தான் இன்றைக்கு இவற்றைப் பெயரளவிலாவது தெரிந்து கொள்ளும் நிலை இருக்கிறது.

இதற்கு முழுக் காரணம் கி.பி.1772இல் தோற்றுவிக்கப் பட்ட **இந்து மறுமலர்ச்சி இயக்கம்**தான். இந்த இயக்கம் பழைய தமிழ் நூல்களை இன்றைய தாள் ஏடுகளிலும் (Papers), தாள் கட்டுக்களிலும்

(Note books) எழுதித் தொகுக்கவும், பரப்பவும் முற்பட்டதால்தான்; தமிழரின் பொறுப்பற்ற, பற்றற்ற மறதிப் போக்குகளாலும், தமிழ்மொழி விரோதிகளாலும், துரோகிகளாலும், பகைவர்களாலும் தமிழுக்கு மிகப் பெரிய இழப்புக்களும், அழிவுகளும் ஏற்பட்ட போதிலும் கூட; கடந்த நான்கு யுகங்களாக, 43,73,087 (1987இல்) ஆண்டுகளாக வளர்ந்து வரும் தமிழ்மொழி வரலாறும், இலக்கிய வரலாறும், இலக்கிய இலக்கணச் செல்வங்களும், **சித்தர்நெறி எனும் இந்து மதத்தால்** பெருமளவு முறையாகவும், நிறையாகவும், தெளிவாகவும் காப்பாற்றப் பட்டுள்ளன.

எனவேதான், *'தமிழ் வாழ்க!'* என்று முழக்கமிட்டுத் தமிழ் உணர்ச்சியையும், தமிழ் வளர்ச்சியையும், தமிழ் ஆட்சியையும் பற்றிய கருத்துக்களை எழுதியும், பேசியுமே பொருளும், புகழும், பதவியும் தேடிச் சுக வாழ்வு வாழுபவர்களால் தமிழுக்கு வளவளர்ச்சியையோ, விழிச்சிமிகு செழிச்சியையோ, கிளர்ச்சிமிகு மறுமலர்ச்சியையோ, உரிமைமிகு ஆட்சிமீட்சியையோ பெற்றுத் தரமுடியாது! பெற்றுத் தரமுடியாது! பெற்றுத் தரமுடியாது! பெற்றுத் தரவே முடியாது! என்பதை உணர்ந்து இந்து மறுமலர்ச்சி இயக்கம் செயலாக்கப் புறப்பட்டு விட்டது.

எனவேதான், சமசுக்கிருதத்தில் மொழிபெயர்ப்பாக இருக்கின்ற கதைகள், காதைகள், கவிதைகள் (காவியங்கள், காப்பியங்கள்), கீதைகள், புராணங்கள், இதிகாசங்கள், நிடதங்கள், ஆரண ஆகமங்கள், வேதங்கள், சாத்திறத் தோத்திறங்கள், ... இன்ன பிறவற்றுக்கும் தமிழில் உள்ள மூல நூல்களை (Original Literature = முதல் நூல்களை) வெளியிடும் பணிகள் துவக்கப் பட்டிருக்கின்றன. இப் பணிகளில் அரசியலோ, சமுதாயமோ, பிற வெறிநிறை துறைகளோ, தனிமனித ஆதிக்கங்களோ, அன்னியர்களின் சூழ்ச்சிகளோ இடம் பெற்று விடாமல் மிகவும் எச்சரிக்கையாக செயல்நிலைகள் வளர்க்கப்

பட்டு வருகின்றன. இவற்றின் சாதனையாகவே விசுவாமித்திர புராணம் பற்றிய இக்கட்டுரை வெளி வருகிறது.

4) திரேதகா யுகத்தில் (1) அ, (2) இ, (3) உ, (4) எ, (5) ஐ, (6) ஒ, (7) க, (8) ச, (9) த, (10) ப, (11) ந, (12) ம, (13) ய, (14) வ இந்த பதினான்கு எழுத்துக்களின் அடிப்படையிலேயே பல அருளாளர்கள் உருவாக்கப் பட்டார்கள் என்ற செய்தி விசுவாமித்திர புராணத்தில் தெளிவாக இருக்கிறது. இந்த எழுத்துக்களுக்கு உட்படாமல் வேறு வேறு எழுத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அருளாளர்கள் 48 பேர்கள் புகழ் மிக்கவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் இதே யுகத்தில் வாழ்ந்திட்டார்கள் என்ற செய்தியும் விசுவாமித்திர புராணத்தில் தெளிவாக இருக்கிறது. குரு பாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் என்ற மூன்று பெரும் தொடர் இலக்கியங்களின் கருத்துக்கள் இந்த விசுவாமித்திர புராணத்தில் இருக்கின்றன.

பல பீடாதிபதிகள் இந்த விசுவாமித்திர புராணத்தைக் குறிக்கின்றார்கள். விசுவாமித்திரர் அரச குலத்தைச் சேர்ந்தவர் என்பதினால் அவருடைய புராணம் அரச பாரம்பரியத்தில் மிகுதியாகக் குறிக்கப் படுகின்றது. விசுவாமித்திர புராணத்தால் அறியப்படுகின்ற அருளாளர்களை இங்கு பட்டியலிட்டுக் காட்டுகின்றோம்.

I அகத்தியர், இகத்தியர், உகத்தியர், எகத்தியர், ஐகத்தியர், ஒகத்தியர், ககத்தியர், சகத்தியர், தகத்தியர், பகத்தியர், நகத்தியர், மகத்தியர், யகத்தியர், வகத்தியர்.

II. அத்திரி, இத்திரி, உத்திரி, எத்திரி, ஐத்திரி, ஒத்திரி, கத்திரி, சத்திரி, தத்திரி, பத்திரி, நத்திரி, மத்திரி, யத்திரி, வத்திரி.

III. அனந்தர், இனந்தர், உனந்தர், எனந்தர், ஐனந்தர், ஒனந்தர், கனந்தர், சனந்தர், தனந்தர், பனந்தர், நனந்தர், மனந்தர், யனந்தர், வனந்தர்.

IV. அருகு, இருகு, உருகு, எருகு, ஐருகு, ஒருகு, கருகு, சருகு, தருகு, பருகு, நருகு, மருகு, யருகு, வருகு.

V. இவர்களல்லாமல் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர், நாரதர், சமதக்கினி, பரத்துவாசகர், கருவாசர், குருவாசர், தருவாசர், திருவாசர், துருவாசர், பிருங்கி (பிறங்கி = பாட வேறுபாடு), புலத்தியர், சுகர், வசிட்டர், எண்கோணமேனியான், சூரியனார், சந்திரனார், பரசுராமர், ... முதலியோர்கள் தனிப்பட்ட அருளாளர்களாகக் காணப்படுகிறார்கள்.

அதிகமாகச் சமய சமுதாய அரசியல் துறைகளில் செல்வாக்குப் பெறாதவர்கள்; அதாவது **வெளியுலகோடு தொடர்பில்லாமல் இலைமறை காயாக வாழ்ந்த அருளாளர்கள்**:

VI. அகர், இகர், உகர், எகர், ஐகர், ஒகர், ககர், சகர், தகர், பகர், நகர், மகர், யகர், வகர்.

VII. அலத்தியர், இலத்தியர், உலத்தியர், எலத்தியர், ஐலத்தியர், ஒலத்தியர், கலத்தியர், சலத்தியர், தலத்தியர், பலத்தியர், நலத்தியர், மலத்தியர், யலத்தியர், வலத்தியர்.

இப்படிப் பட்டியலிட்டுக் காட்டுமளவிற்கு திரேதகா யுகத்தில் வாழ்ந்த அருளாளர்கள் பலரையும் பற்றிய செய்திகள் நிறைந்த புராணம்தான் விசுவாமித்திர புராணம். தமிழர்கள் இதனை எப்படி மறந்தார்கள் என்பதுதான் மிகப் பெரிய வியப்பாக இருக்கிறது.

5) விசுவாமித்திரர் ‘கௌசிகன்’ என்றே அழைக்கப் படுகிறார். இதற்குக் காரணம் **‘குசிக’** குலத்தில் பிறந்தவர் என்பதேயாகும். அதாவது **‘குசிகர்’** என்ற சொல் **‘கௌசிகர்’** என்று காலப் போக்கில் பெயர் பெற்றது. ஏனென்றால், இந்த குசிக குலத்தில் தோன்றியவர்களில் இவரே மிகப் பெரிய சாதனைகளைச் சாதித்தவராக

உள்ளார். இவரால்தான் இந்தக் குலம் குருகுலத்திற்கு உரிய ஒன்று என்ற தகுதியைப் பெற்றது.

ஆனால், இவர் எவ்வளவோ முயன்றும் அயோத்தி நாட்டை ஆண்ட அரிச்சந்திரன் முதல் இராமன் வரையிலும் யாருமே இவரைச் சூரிய குலத்திற்குரிய அரசகுருவாக ஏற்றுக் கொள்ளவில்லை. திரேதகா யுகத்தில் அதாவது இவர் வாழ்ந்த யுகத்தின் 12,90,000 ஆண்டுகள் என்கின்ற இடைவெளிக் காலத்தில் மேலாண்மை நிலையிலேயே இருந்திட்ட சூரிய அரச குலத்திற்கு இவரால் குருவாக மாறவே இயலவில்லை. ஏனெனில், வசிட்டர் சூரிய குலத்தின் அரசகுருவாக இந்தத் திரேதகா யுகம் முழுவதும் தொடர்ந்து பதவி வகித்திட்டார். இதனால்தான் இவருடைய வாழ்க்கை ஆரம்பம் முதல் இறுதி வரை போராட்டக் களமாகவும், போர்க் களமாகவும் இருந்திருக்கின்றது.

மேலும், இவர் தனக்கென ஓர் அரச குலம் தேவையென்பதால் இலங்கை வேந்தனான அரக்கர் கோன் இராவணேசுவரன் குலகுருவாக, அரசகுருவாக மாறுவதற்குப் பெரு முயற்சிகள் செய்தார். அதற்கு இராவணன் ஒத்துக் கொள்ளாததால் அவனுடைய அழிவுக்கும், சூரியகுல இராமனின் அழிவுக்கும் தானே காரணமாகிறார். இறுதியில் இராவணேசுவரனின் அரக்க குலத்தையும், அரிச்சந்திரனின் சூரிய குலத்தையும் இணைத்து புதிய ஓர் அரச குலத்தைத் தோற்றுவித்தார்.

இதுபோலத்தான் அவர் முன்பு திரிசங்கு என்ற மன்னனை உடலோடு தேவலோகம் அனுப்பிய போது இந்திரன் அவனை ஒத்துக் கொள்ள மறுத்து கீழே தள்ளியது கண்டு விசுவாமித்திரர் திரிசங்குவிற்காக ஒரு புதிய தேவலோகத்தையே படைத்துக் கொடுத்தார். இப்படித்தான் அவர் தனது முயற்சிகளில் விடாப்பிடியாக இருந்து ஏதாவது ஒரு சாதனையைத் தனது வெற்றியாக்கி விடுவார்.

6) இவர், கடுமையான தவங்களை இப் பாரத நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று தங்கிச் செய்து பிறமணிடமிருந்து பல வரங்களைப் பெற்று **‘பிறம முனி’** (பிறம இருடி, பிறம ரிசி) என்ற உயர்ந்த பட்டத்தைப் பெற்றார். இவர் வசிட்டருடைய காமதேனு என்ற பசுவைத் தமக்குரியதாக்க முயன்ற போது தோற்று **‘பிறம பதம்’** என்ற சித்திநிலைதான் உயர்ந்தது என்பதை உணர்ந்தார். அதனால் தென்னாட்டிற்கு வந்து பொதியமலையில் தங்கிக் கடுந்தவம் இயற்றிப் பிறமதேவனிடமிருந்து **‘அரச முனி’** (அரச இருடி, அரச ரிசி => ராச முனி, இராச ரிசி) என்ற பட்டத்தைப் பெற்றார்.

இவர் தெய்வத் திருநாடான தென் தமிழ்நாடு வந்து கடுந்தவம் செய்ததால் மதுரைக் கரந்தமலையில் இருந்த பிறமதேவன் விரைவில் இவருக்குத் தோற்றமளித்து இவர் வேண்டிய வரத்தை அளித்தான். அதாவது, கடலுள் மறைந்த **‘இளமுறியாக் கண்டம்’** என்ற குமரிக் கண்டத்தில் விண்வெளியில் இருந்து வந்த பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், தாத்தாக்களும் ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் உருவாக்கிய இந்து மதத்திற்குரிய அனைத்து வகையான கடவுள்களும் (48 வகை), 48 வகை வழிபடு நிலையினர்களும், 48 வகை அருட்பட்டத்தவர்களும், ... தொடர்ந்து **தமிழ்நாட்டில்தான்** வாழ்ந்து வருகிறார்கள். இப்பேருண்மையை விளக்கும் வண்ணம்தான் விசுவாமித்திரர் தாம் செய்ய நினைத்த அரிய பெரிய தவத்தினைச் செய்வதற்காக வடநாட்டை விட்டுத் தென்னாட்டிற்கு வந்து பொதிகை மலையில் தவம் செய்தார்.

இன்றைக்கும் திருநெல்வேலி மாவட்டப் பொதிகை மலையில் விசுவாமித்திரன் தவம் என்ற ஒரு மலைப் பகுதி, அகத்தியர் தவம் என்ற ஒரு மலைப் பகுதி, வசிட்டர் தவம், புலத்திரர் தவம், பிருங்கி தவம், துருவாசர் தவம், சுகர் தவம், அத்திரி தவம், நாரதர் தவம், பரத்துவாசர் தவம் (பாரத்துவாசர் = பாட வேறுபாடு)

சமதக்கினி தவம், வால்மீகி தவம், பரசுராமர் தவம், ... எனப்படும் மலைப் பகுதிகளுக்கு நடுநாயகமாக விளங்குகிறது.

அதாவது, வட இமயமலை தோன்றுவதற்கு முன்பே கிரேதாயுகத்தில் அனைத்து வகையான **அருளாளர்களும், அருளாளிகளும், அருளாடு நாயகங்களும், மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடு நாயகங்களும்** (இந்த ஆறு வகைச் சமயத்தாரும் 'அறு சமயத்தார்' அல்லது 'ஆறு சமயத்தார்' என்றே தமிழ் இலக்கியங்களில் குறிக்கப் படுகின்றனர்) கடலுக்குள் மறைந்திட்ட தென் இமயமலையில்தான் வாழ்ந்திட்டார்கள் என்பதால்தான்; வட இமயமலையிலும், அதைச் சார்ந்த பகுதிகளிலும், வட இந்தியாவிலும் எந்த அருளுலகத்தார் தோன்றினாலும், அவர்கள் தென்னாட்டிற்கு, குறிப்பாகத் **தமிழகத்திற்கு வந்துதான் சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் பெற முடிகிறது**.

7) பொதிகை மலையிலிருந்து மேற்கே பயணப்பட்டு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தங்கி மீண்டும் பிறமதேவனை நோக்கிக் கடுமையான தவம் செய்தார். அப்பொழுது மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழ்ந்த அருளாளர்களுக்கும் இவருக்கும் கடுமையான போராட்டங்கள் நிகழ்ந்தன. ஒருமுறை இவர் அந்த முனிவர்கள் நரபலியிடக் கட்டி வைத்திருந்த சனச்சேபன் என்பவனுக்கு (சனச் சேவுகன், சனச் சேபகன், சனச் சேபன் என்ற பாட வேறுபாடுகள் இந்தச் சனச்சேபன் என்ற சொல்லுக்கு உண்டு) இரண்டு மந்திரங்களை ஓதுவித்து அவனைத் தப்புவிக்கச் செய்தார். இதுபோலப் பல செயல்களைச் செய்து மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்த அருளாளர்களுக்கிடையில் தன்னைத் தனித் திறம் உடையவராக நிலைநாட்டிக் கொண்டார். அதனால், எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று மிகப் பெரிய வேள்விகளையும், யாகங்களையும், யக்ஞங்களையும், ஓமங்களையும், ஓகங்களையும் செய்தார். அவற்றின் பயனாக மற்றொரு பிறமதேவன் (முன்பு வந்தவரல்ல) நேரில்

தோன்றி இவருக்கு **‘இருடி’** (ரிசி, முனிவர்) என்ற பட்டத்தை வழங்கினர்.

8) விசுவாமித்திரர் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து நேராகக் கொல்லி மலை வந்து தேவேந்திர பதவி பெற வேண்டும் என்பதற்காக விண்ணுலகச் சத்திகளையும், சித்திகளையும் பெறக் கூடிய **‘முத்தீ ஓம்பல்’** எனும் பூசைகளைச் செய்தார். அதாவது கந்தழி நிலைத் தொழுகையை, வள்ளி நிலைப் பருவபூசையை, அமாவாசைக்குரிய கொடிநிலை வேண்டல் பூசையைச் [இது வேட்டல், வேள்வி என்ற இரண்டு பாட வேறுபாடுகளைக் கொண்டது] செய்தார். அதனால், தேவலோகமே அனல் மழையில் சிக்கித் திண்டாடிற்று. உடனே இந்திரன் மேனகை என்ற தேவலோக நாட்டியப் பேரழகியை கொல்லிமலைக்கு அனுப்பி விசுவாமித்திரரின் சத்திகள் அனைத்தையும் மோக தாகத்தால் நலிவுறச் செய்தான். விசுவாமித்திரரும் சில காலம் மேனகையோடு வாழ்ந்து ஒரு குழந்தைக்குத் தந்தையான பிறகு தன்னுடைய பெண்ணின்ப போக, மோக மயக்கங்களில் இருந்து விடுபட்டார்.

உடனே, அவர் மீண்டும் கடுமையான தவங்களைச் செய்து தேவலோகம் சென்று இந்திரன் சபையில் இடம் பெற்றார். அங்கு அரசகுருவாக இருந்த வசிட்டரோடு போரிட்டு வென்றார். ஆனாலும், இருவருக்குமிடையே போராட்டங்கள் ஓயவே இல்லை. தேவலோகம் அமைதியிழந்தது. அதனால் சிவபெருமான் இவர்களிருவரும் மண்ணுலகிற்குப் போய் யார் யாரை விடப் பெரியவர் என்ற போட்டியை நிகழ்த்திக் கொள்ளுமாறு சாபம் கொடுத்தார். சாபம் பெற்ற இருவரும் நேராக மதுரை மாவட்டம் மேலூருக்கு அருகில் உள்ள கரந்தமலையில் வந்து தங்கினர்.

இதில் வசிட்டர் நேராக கங்கைக் கரை அயோத்திக்குச் சென்று சூரியகுல அரசர்களுக்கு மீண்டும் அரசகுருவானார். ஆனால், இவர்

(விசுவாமித்திரர்) நேராக வட இமயமலைக்குச் சென்று திருக்கயிலை மலையிலும், சிவன் மலையிலும், சத்தி மலையிலும், முருகன் மலையிலும், காளி மலையிலும், மாரி மலையிலும், பகவதி மலையிலும், இடாகினி மலையிலும், திருமால் மலையிலும் கடுமையாகத் தவங்களைச் செய்து பிறமணாற்றின் கரைக்குச் சென்று கடுமையான தவங்களைச் செய்தார். அங்கிருந்த மரங்களெல்லாம் தவ நெருப்பில் வெந்து அரக்கு மரங்களாக மாறின. அந்நிலையில் அவரை அமைதிப் படுத்த தேவலோகத்திலிருந்து சிவபெருமானால் பிறமதேவன் அனுப்பப் பட்டான். அவர் இவருக்கு **'மகா முனி'** (மகா ரிசி, மகா இருடி, மகா ஞானி, மகான்) என்ற அருட்பட்டத்தை வழங்கினார்.

அதன்பிறகு இவர் மீண்டும் தெற்கே வந்து எல்லா மலைப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்து பச்சை மலைப் பகுதியை தனது தவத்திற்குரிய சிறந்த இடமாகத் தேர்ந்தெடுத்து அங்கு மந்திறம், மந்திரம், மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், எந்திறம், எந்திரம், எந்தரம், ஏந்தரம், ஏந்தரீகம், தந்திறம், தந்திரம், தந்தரம், தாந்தரம், தாந்தரீகம், தவம், முத்தீ ஓம்பல், ஐந்தீ வேட்டல் எனும் பதினெட்டையும் மோன ஞானப் பூசைகளிலும், ஞான மோனப் பூசைகளிலும் செய்து முடித்து சிவன், திருமால், பிறமண், குபேரன், நாரதர் எனும் ஐவரையும் நேரில் வரவழைத்து அவர்களாகவே தனக்கு **'பிறம இருடி'** (பிறம முனி, பிறம ரிசி) என்ற பட்டத்தைத் தருமாறு செய்தார்.

ஆனால், இவர் **'பிறம்ம யோகி'** என்ற பட்டத்தைப் பெறுவதற்கு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் யாரும் இவருக்கு உதவ முன்வர வில்லை. எனவே, அவர் **'பிறம்ம முனி'** என்ற பட்டத்தோடு மன நிறைவு கொண்டு; மண்ணுலகில் உள்ள ஏதேனும் ஒரு அரச குலத்திற்கு அரசகுருவாக வேண்டுமென்ற பெருமுயற்சியில் ஈடுபட்டார்.

இவர் முரட்டுத் தனமான வறட்டுப் பிடிவாதமுடையவர் ஆதலால் தன்னை அரச குருவாக ஏற்றுக் கொள்ளாத அரக்கர் குலத்தையும், சூரிய குலத்தையும் அழித்து இரண்டும் இணைந்த அல்லது கலந்த ஒரு புதிய அரச குலத்தைத் தோற்றுவித்து விட்டு மன நிம்மதியைத் தேடிப் பொதிகை மலைக் காடுகளுக்கு வந்து சேர்ந்தார். இன்றைக்கும் இவர் பொதிகை மலை, கொல்லி மலை, பச்சை மலை, கரந்த மலை முதலிய மலைகளில் 'ஞான உலா' வருவதாகக் கூறுகிறார்கள். இவரைச் சித்தி செய்து கொள்ள விரும்புகிறவர்கள் மேற்படி மலைகளுக்கெல்லாம் சென்று இவரை நோக்கித் தவம் செய்வது வழக்கில் இருந்து வருகிறது.

9) விசுவாமித்திரர் பச்சைமலையில் 'பிறம்ம முனி' என்ற பட்டம் பெற்றதை அயோத்தியில் இருந்த வசிட்டர் ஒத்துக் கொள்ள மறுத்தார். அதனால்தான், இவருக்கும் அவருக்கும் கடுமையான போராட்டம் உருவாகி அயோத்தியை ஆண்ட சூரிய குல மன்னனை அரிச்சந்திரனின் வாழ்க்கையைச் சோதனைப் பொருளாக்கினார்கள். இச் சோதனை வெற்றி தோல்வி இன்றி முடிந்தது. மீண்டும் சிவன், திருமால், பிறமண், குபேரன், நாரதர், முருகன், மலைமகள், அலைமகள், கலைமகள் முதலியவர்களெல்லாம் நேரில் தோன்றி விசுவாமித்திரர் 'பிறம்ம முனி'தான் என்ற நிலையை வசிட்டர் ஒப்புக் கொள்ளுமாறு செய்தார்கள். அதன்பிறகே விசுவாமித்திரரும், வசிட்டரும் ஒருவரை யொருவர் மதித்து விரும்பி ஏற்றுப் போற்றி நண்பர்களாக வாழ்ந்தார்கள்.

10) விசுவாமித்திரருக்கு எப்போதுமே முரட்டுத் தனமான வறட்டுப் பிடிவாதம் உண்டென்பதால்; எப்படியாவது வசிட்டர் அரச குருவாக இருந்த சூரிய குல அரச பரம்பரைக்கு அழிவைத் தேட முயன்றார். அதாவது, சூரிய குலத்தை முழுமையாக அழிக்க முடியா விட்டாலும் அதனுடைய தனித் தன்மைகளையும், வாய்மை நிலைகளையும் சிதைக்க

விரும்பினர். அதன்படி, நன்கு திட்டமிட்டு சனக மன்னனின் வளர்ப்பு மகளான, அரக்கர் குல இலங்கை வேந்தன் இராவணேசுவரன் மகள் சீதையை, அயோத்தி மன்னன் தசரதனின் மகன் இராமனுக்கு மணமுடித்து; அரக்க குலத்தின் கலப்பால் சூரிய குலத்தின் தனித் தன்மைகளை, வாய்மை நிலைகளை அழிக்கத் திட்டமிட்டார்; அதில் வெற்றியும் பெற்றார்.

11) தசரதனின் மகனான இராமனையும், இலக்குவனையும் வசிட்டரின் ஒப்புதலோடு தனக்குத் துணையாகக் காட்டுக்கு அழைத்து வந்தார். அவர்கள் இருவருக்கும் தன் மீது நம்பிக்கை ஏற்படுவதற்குப் பசியெடுக்காமலும், தாகம் தோன்றாமல் இருக்கவும் கூறும் <u>**‘பலா’, ‘அதிபலா’**</u> என்ற மந்திரங்களை வழங்கினார். மேலும், தன்மீது மிகுந்த பத்தி ஏற்படுவதற்கு தாடகை என்ற அரக்கியை இராமன் மூலம் மாய்வித்து அவனுக்கு <u>**‘சிரும்பகம்’**</u> (சீரம்பகம், சிறும்புகம் என்ற பாட வேறுபாடுகள் உண்டு) முதலிய பல சிறந்த அத்திரங்களை வழங்கினார்.

பின் வஞ்சகமாக அவர்களை மிதிலைக்கு அழைத்துச் சென்று சனகனின் வளர்ப்பு மகளான சீதையை [அரக்கர் குலத்தைச் சார்ந்த இலங்கை வேந்தனான இராவணனுக்கும், அவன் மனைவி வண்டமர்குழலிக்கும் முதல் மகளாகப் பிறந்தவள்] இராமனுக்குத் திருமணம் செய்து முடித்தார். மிதிலைக்குச் செல்லுகின்ற வழியில் இராமனிடமிருந்த தெய்வீக ஆற்றலைப் பயன்படுத்தி கல்லாகக் கிடந்த அகலிகையை பெண்ணாக மாற்றினார். இப்படி இராமனுடைய தெய்வீக ஆற்றல் முழுவதும் செலவிடப்பட்டு விட்டதால்தான் இராமனால் விசுவாமித்திரரின் சூழ்ச்சியை உணர்ந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. சீதையையும், அரக்கர் குலப் பெண் என்பதை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது.

இப்படிச் சுயம்வரத்தின் பேரால் சீதையை இராமனுக்குக் கட்டி வைத்ததினுல்தான் விசுவாமித்திரர் முழுவெற்றி பெற்ருர். ஆனுல், சீதைக்கும், இராமனுக்கும் வாரிசு பிறக்காமல் இருப்பதற்காக இரண்டு பேர்களேயுமே தவக் கோலம் பூண்டு 14 ஆண்டுகள் காடுகளில் வாழச் செய்தார் வசிட்ட மாமுனிவர். இப்படி விசுவாமித்திரரின் சதியை வசிட்டர் முறியடித்தார். ஆனுல், விசுவாமித்திரர் தொடர்ந்து முயற்சித்து சீதையைப் பயன்படுத்தியே தன்னே அரசகுருவாக ஏற்றுக் கொள்ளாத அரக்க குலத்தையும், சூரிய குலத்தையும் அழித்தார்.

***//உண்மை நகல்//***

***//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரராமன், சித்தரடியான் திரு சீனிவாசன் (வேம்படிதாளம்) ஆகியோர்களின் கையெழுத்துக்களில் இருந்தது.//***

# வால்மீகி இராமாயணம்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் சித்தர்களால் உருவாக்கப்பட்டது சமசுக்கிருத மொழி; மூன்ருவது சங்கத்து தமிழ்ப் புலவனுன, புறநானூற்றுப் பாடல் பாடிய வால்மீகி இந்தச் சமசுக்கிருத மொழியில் நல்ல புலமை பெற்று இராமாயணத்தைச் சுருக்கமாக ஒரு சிறிய காப்பியமாகப் பாடினுன். ஆனுல் பெயர் ஒற்றுமை கருதி இந்த வால்மீகியே இராமாயணக் காலத்து வால்மீகி என்ற கருத்துக் குழப்பம் தோன்றி முதன்முதல் இராமாயணம் சமசுக்கிருத மொழியில்தான் பாடப்பட்டது என்ற கற்பனுவாதம் ஏற்பட்டு விட்டது.

# சித்தர் இராமாயணம் சிறு குறிப்புக்கள்

1. வீடணனும் (இராமாயணத்தில்), கண்ணனும் (பாரதத்தில்) ஒரே மாதிரியான பாத்திரப் படைப்பு பெற்றவர்கள். வீடணன் ‘அண்ணன் இராவணனை எதிர்த்துப் போர் தொடுப்பதில்லை’ என்று முடிவெடுத்துச் செயல்படுகின்றான். எனவே கடைசிவரை உத்திகளை மட்டுமே கூறுகின்றான்.

2. கடைசி நாளில் இராமனிடம் இரண்டு அம்புகளை எடுக்கச் சொல்கின்றான் வீடணன். ஒன்று பிறைபோன்ற அம்பு, மற்றொன்று கூரிய அம்பு. கூரிய அம்பைப் பார்த்த உடனே இராவணன் அண்ணாந்து நோக்க, அது இராவணனின் அமுத கலசத்தை உடைக்கின்றது. அதே நேரத்தில் பிறை வடிவ அம்பு அவனது கழுத்தை வெட்டுகின்றது.

3. பொதுவாகச் சித்தர் இராமாயணம் பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் குறிக்கப்படவில்லை. அவ்வளவு முக்கியத்துவம் இராமாயணத்திற்கோ, பாரதத்திற்கோ தரப்படவில்லை. பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி கூடத் தனது குருபாரம்பரியத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் குறிக்கின்றார். சித்தர் ஏளனம்பட்டியார்தான் மிகவும் சிரமப் பட்டுத் தேடிக் கண்டுபிடித்து இராமாயணத்தையும், பாரதத்தையும் பற்றிய குறிப்புக்களை எழுதுகின்றார். குருதேவர் எழுதுகின்ற குறிப்புக்கள் சித்தர் ஏளனம்பட்டியாரும், குருதேவரின் தந்தையும் எழுதி வைத்துள்ள குறிப்புக்களிலிருந்து எடுக்கப் பட்டவைதான்.

4. சீதை, தன்னை அரக்கி என்று அயோத்தி அரண்மனையில் கூறித் துன்புறுத்தியதால், இராவணனை தந்தை என்று உணர்ந்த பின்னால், இராமனை இலங்கைக்கு வரவழைத்துப் பட்டம் சூட்டி அயோத்தியுடன் போர் தொடுத்து அனைவரையும் அழிக்கவே நினைக்கின்றாள்.

5. விசுவாமித்திரரின் அத்திறம் மிகவும் சத்தி வாய்ந்தது. அவர்தான் இராமனுக்கு எல்லா அத்திறங்களையும் கற்றுத் தருகின்றார். வீடணன் அத்திறங்களை ஓச்சுவதிலும், வியூகங்களை அமைப்பதிலும் மிகச் சிறந்தவன். போர் வியூகங்களைப் போல, அத்திறங்களை எப்படி மாற்றி மாற்றி உபயோகிப்பது என்பதை நன்கு அறிந்தவன். இதன் மூலம்தான் இராவணன் மூவுலகையும் வெல்கின்றான். இராவணனின் வில்லும், இராமனின் வில்லும் சிவனுடையதே! எனவே, அந்த வில்லை முறிக்குமாறு வீடணன் அத்திற வியூகத்தைக் கூறியதும், இராமன் இராவணனின் சிவதனுசுவை முதல்நாள் போரில் ஒடித்து விடுகின்றான்.

6. இராவணன் தன் மருமகனைப் போரிட்டு அழைத்து வருவதாகத்தான் சீதையிடம் கூறிச் செல்கின்றான். அதனால்தான் கடைசி வரையிலும் போரை எதிரியை அழிக்கும் போராக நடத்த வில்லை.

7. இராவணன் கடைசி வரையிலும் வண்டமர்குழலியை சீதையைப் பார்க்கக் கூட அனுமதிக்க வில்லை. இராவணன் இறந்தவுடன் சீதை, “எந்தையே! ஏழிசை வல்லவரே! எண்டிசையும் வென்றவரே! என்னால்தான் மாண்டீரோ!” என்று கோட்டையை விட்டு ஓடி வந்து கதறுகிறாள். அப்போது யாரோ ஒரு பெண் தன் கணவனுக்காக அழுது கொண்டு செல்வதைப் பார்த்த வண்டமர்குழலி ‘அவள்தான் தனது மகள்’ என உணர்ந்து சீதையைக் கட்டிப் பிடித்து அழுகின்றாள்.

"ஐயோ! மகளே! நீ இருப்பது தெரிந்திருந்தால் உன்னைக் கடலில் கொண்டு வைத்துவிட்டு இப்போரை வெற்றியாக்கி யிருப்பேனே" என்று கதறுகின்றாள்.

8. **<u>சித்தர் இராமாயணம் கூறுகின்றது:-</u>**

"சனகன் மகள் சீதை இந்திராணியைப் போன்ற அழகுடையவள் என்பதை விட, இராவணன் மனைவி வண்டமர்குழலியைப் போல் அழகுடையவள் என்பதுதான் சாலச் சிறந்தது. ஏனெனில், இந்திராணியை விட அழகு மிக்கவள் வண்டமர்குழலி என்று மக்கள் பேசிக் கொள்கின்றார்கள்."

9. சுயம்வர மண்டபத்தில் இராவணன் சீதையைப் பார்த்து மனதில் நினைக்கின்றான்: "ஆயிரம் கோடி இந்திராணிகளின் அழகு என் மனைவி வண்டமர்குழலிக்கு ஈடாகாது என்று இறுமாந்திருந்தேன். ஆனால், என் மகள் சீதையின் பேரழகோ என் மனைவி வண்டமர்குழலியின் அழகுபோல் பல்லாயிரம் கோடி மடங்கு சிறப்புடையதாக இருக்கின்றது. அந்தோ! இப்பேரழகு மிக்க மகளை என் மார்பிலும், தோளிலும் தூக்கி வளர்க்க முடியாமல் போய்விட்டதே! இவளின் மழலை மொழியைக் கேட்க முடியாமல் போய்விட்டதே! இவளின் தளிர்நடையைப் பார்க்க முடியாமல் போய்விட்டதே!......."

10. சீதை தன் மகன்களாகிய இலவ குசர்களிடம் கூறுகின்றாள்: "அயோத்தி அரண்மனையில் உள்ளவர்கள் அரக்கி, அரக்கி என்று கூறி என்னை அரக்க மனம் படைத்தவளாக்கி விட்டார்களடா, மகன்களே! அவர்கள்பால் எனக்கு இரக்க மனம் வந்துவிடக் கூடாது. எனவே, அவர்களைத் தனித்தனியாகக் கொன்று விடு! அவர்களை அச்சத்தால் துடிதுடிக்கச் செய்து தனித்தனியாகக் கொன்று சாகடிக்க வேண்டும்".

**[அரக்க மனம் = உறுதியான மனம் = இளகாத மனம்; மனித மனம் = இளகிய மனம்.]**

11. குருதேவரின் தந்தை, “இராவணனைக் காட்டிக் கொடுக்கும் வீடணனும், இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசும் ஒன்றே” என்று கூறுவாராம்.

12. வீடணனுக்குச் சிறுவயது முதலே இராவணனின் சிம்மாசனத்தில் அமர வேண்டும் என்ற பேராவலால், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான்.

13. இராமன் அனுப்பிய ஒற்றன் அனுமன். இராமன் அனுப்பிய தூதுவன் அங்கதன். அனுமனைத் தூதனுப்பிச் ‘சீதை அங்கிருக்கின்றுளா?’ என்று அயோத்தி இளவரசன் இராமன் கேட்பதை விடுத்துத் திருட்டுத்தனமாக ஒற்றறிய அனுமனை அனுப்புகின்றுன். அதனுல்தான் இராவணன் கோபமடைகின்றுன்.

14. “இராமன் அனுப்பிய ஒற்றன் அனுமன் இலங்கை வந்த போதே வீடணன் அவனோடு ஒப்பந்தம் செய்து கொள்கின்றுன். அப்போதே வீடணன் இராமன் பக்கம் போய் விட்டான். இப்போது போனது கண் துடைப்பே” என்று வண்டமர்குழலியின் தந்தையான விசுவகர்மாவிடம் கூறுகின்றுன் இராவணன்.

15. இராவணன் அனுமனை ‘ஒற்றன்’ என்று கூறுவான். வீடணனே ‘தூதுவன்’ என்று வாதிடுவான். ‘தூதுவன் என்றுல் என்னை நேரடியாக அல்லவோ வந்து சந்திக்க வேண்டும், திருட்டுத்தனமாக ஏன் சீதையை இலங்கையில் தேட வேண்டும். அதிலும் இராமன் ஒரு சூரியகுல அரசன். எனவே, அரச நீதியின்படி ஒற்றனைக் கொல்லுதல் வேண்டும். அதனுல், அனுமனைத் தீயிட்டு அனுப்புகின்றேன்’ என்றுன் இராவணன்.

16. கும்பகர்ணனுக்குத் திருமணம் ஆகாததால் முதலில் அனுமன் தன்னைச் சந்தித்த போதே வீடணன், இராவணனின் இரண்டு மகன்களையும் கொன்று விட்டால்; தான் நேரடியாகப் பட்டத்துக்கு வரமுடியும் என்று கூறுகின்றுன். அதன்படி சிறிய பாலகனுக

இருந்த அச்சயக் குமாரனை எளிதாகக் கொன்ற அனுமன், மேகநாதனைக் கொல்ல முயல்கையில் அவன் மாயத்தால் எளிதாக மேலே சென்று விடுகின்றான்.

17. இராவணன் கும்பகர்ணனிடம், "உன் தம்பி வீடணன் அனுமனிடம் ஏற்கனவே செய்த ஒப்பந்தத்தினால்தான் நான் திட்டியதும் அதைச் சந்தர்ப்பமாகக் கருதிச் சென்று விட்டான். என் இரு மகன்களைக் கொல்லச் சொல்லியவன் உன் தம்பி வீடணன்" என்று மனந்திறந்து தன் ஆற்றாமையைக் கூறுகின்றான். மேலும், "இப்படிப்பட்ட வீடணனைக் கொல்ல மறுக்கிறாயே கும்பகர்ணா?" என்கின்றான். ஆனால், கும்பகர்ணன் வீடணனைக் கொல்லாததால்தான் போரின் முடிவு மாறுகின்றது.

18. அனுமன் கொன்ற அச்சயக் குமாரனின் மரணச் செய்தி கேட்டு இராவணன் மிகுந்த வருத்தமடைய வில்லை. மாறாகச் சீதையின் வரவால் முன்பில்லாத மகிழ்ச்சியை அடைகின்றான். இராவணன் மேகநாதனிடம் "உனது சகோதரி வந்துள்ளாள்" என்று கூறினான். மேகநாதன் புரியாமல் தன் தாயைக் கேட்கின்றான். வண்டமர்குழலிக்கும் புரியவில்லை.

19. காட்டில் தவ வாழ்க்கை வாழ்ந்தபோது ஒருமுறை கூட இராமன் இலக்குவனைப் பார்த்து "உண்டாயா? உண்ணுகின்றாயா?" என்று கேட்கவில்லை. ஒரே ஒருமுறை காட்டில் ஒரு கனியைக் காட்டி 'இது நன்றாக இருக்கின்றதா பார்!' என்று மட்டும் இராமன் இலக்குவனிடம் தந்தான். இதனால் மனமுடைந்த இலக்குவன், 'நல்லாயில்லாத அந்தக் கனியைக் கூடத் தின்று பார் என்று கூறவில்லையே' என வருந்தித் தன் தொடையைக் கீறி அதனுள் அக்கனியை வைத்து மூடிக் கொள்கிறான். பட்டம் சூட்டு விழா முடிந்ததும் இராமன் கேட்கின்றானாம், 'இலக்குவனா! சாப்பிட்டாயா?' என்று. அப்போது இலக்குவன் சொல்கின்றான்: 'நான் சாப்பிட்டு 14 ஆண்டுகள் ஆகின்றன, இராம! ஒருமுறை கூட என்னைச்

சாப்பிடுகின்றாயா? என்று நீ கேட்க வில்லையே!'. இதைக் கேட்ட இலக்குவனின் தாய் பதறி இராமனிடம், 'எனது வயிற்றெரிச்சல் உன்னை அழிக்கட்டும்' என்கின்றாள். அந்தத் தீ இராமனைச் சேருகின்றது.

20. தவ வாழ்க்கையில் யாரையும் கொல்லக் கூடாது. எனவேதான், இலக்குவன் இராமனுக்குத் துணையாகச் சென்று வேட்டையாடி நன்கு சமைத்து உணவு தருகின்றான். தவ வாழ்க்கையில் ஆயுதம் எடுக்கக் கூடாது. இருந்தாலும் சண்டைக்குப் போகின்றான் இராமன் இராவணனிடம்.

## விசுவாமித்திரரின் வெற்றி

விசுவாமித்திரர் நன்கு திட்டமிட்டே அரக்கர் குல மகளான சீதையைச் சூரிய குல இளவலான இராமனுக்கு மணமுடித்து வைக்கின்றார். அதற்குக் காரணம் "வசிட்டரைத் தானாகவே அரசகுரு பதவியைத் துறந்துவிட்டு ஓடச் செய்வேன்" என்று சபதமிட்டிருந்தார் விசுவாமித்திரர். "அது ஒருநாளும் நடக்காது" என்றார் வசிட்டர்.

திருமணம் முடிந்து வெகுகாலம் கழித்துத்தான் 'அரக்கர் குல இராவணன் மகள் சீதை' என்பதை வசிட்டர் உணருகின்றார். எனவேதான், வசிட்டர் இராமன் காட்டுக்குப் போவதை அனுமதிக்கின்றார். அப்போது விசுவாமித்திரர் தனது நெருக்கமான குருகுல மாணாக்கர்களிடம் "தாய்ப் பசு கன்றைத் தேடி ஓடி வருவதுபோல இந்தச் சீதையை மிக விரைவில் இராவணன் அடையாளம் தெரிந்து எடுத்துச் சென்று விடுவான். தன் மகளுக்காக இராவணன் எதையும் செய்வான். அப்போது என்னுடைய வில் வித்தையால் இராமன் இராவணனைக் கொல்லுவான். அதேபோல், சீதையின் வயிற்றில் பிறக்கக் கூடிய இராவணனின் பேரர்கள் இராமனை என்னுடைய வில் வித்தையினால் கொல்லுவார்கள். ஒரே

கல்லில் இரண்டு மாங்காய். இந்த விசுவாமித்திரரின் வித்தையைத் தெரியாத சொத்தைகள் இவர்கள். இந்த வசிட்டன் தன்னைத் 'தேவகுரு' என்றும் என்னை 'அசுரகுரு' என்றும் சொன்னான். இந்த அசுரகுரு வித்தையினால் அசுரர்களும் அழியப் போகின்றார்கள், தேவர்களும் அழியப் போகின்றார்கள். இந்த வேடிக்கையை இந்த வசிட்டன் பார்க்கத்தான் போகின்றான். இந்த வசிட்டனால் தேவர்களின் அழிவையும் தடுக்க முடியாது, அசுரர்களின் அழிவையும் தடுக்க முடியாது.

"இந்த வசிட்டன் தன்னைத் தேவகுரு என்று பெருமையடித்துக் கொள்கிறான். இவன் நாளைக்குச் சூரிய குலத்து மருமகளான அரக்கர் குலக் குமாரியான சீதையின் வயிற்றில் பிறக்கப் போகும் குழந்தைகள் சூரிய குல மன்னர்களாக முடிசூட்டி ஆளும்போது இந்தத் தேவகுருவான வசிட்டன் எப்படி அந்த அரக்கர் குலத்திற்கு அரசகுருவாக இருக்க முடியும்? இந்த விசுவாமித்திரன் அரிச்சந்திரனைப் பயன்படுத்தியதால்தான் தோற்றான். ஆனால், அயோத்தி மன்னர்களையும், இலங்கை வேந்தனையும் பயன்படுத்துவதில் தோற்க மாட்டான். நான் விளையாடப் போகும் அரசியல் சதுரங்க விளையாட்டில் இருவர் ஆட்டத்தையும் நானே விளையாடப் போகின்றேன். சூரிய குலத்துக்கும் நானே வித்தை கற்றுக் கொடுத்தேன்; இனிமேல், நானே அரக்கர் குலத்திற்கும் கற்றுக் கொடுப்பேன். இந்த அயோத்திய அரச குடும்பத்தினர் அனைவரையுமே தனித்தனியாகப் பதறப் பதறக் கதறக் கதறக் கொலைபட்டுச் சாகச் செய்வேன். அப்போது இந்த வசிட்டன் அரசகுருவாக இருந்து எதைச் செய்யப் போகின்றான்?! யாரைக் காப்பாற்றப் போகின்றான்?! இந்த யுகத்தின் முனிவனாக, இருடியாக என் பேரை நிலைநாட்டுகின்றேனா? இல்லையா? என்பதைப் பார்!" என்றார்.

**ஆராய்ச்சிக்கு**: உண்மையிலேயே விசுவாமித்திரர் வெற்றி பெற்றாரா?; இல்லை என்றுதான் கூற வேண்டும். ஏனெனில், அவருடைய

செயல்கள்தான் வென்றனவே தவிர, வெற்றிக்குரிய புகழ் நிலைக்க வில்லை.

[8-4-1988 வெள்ளியன்று இக்கருத்தினை குருதேவர் அவர்கள் வெளியிட்டார்.]

## <u>விசும்பு + அத்திறர் => விசும்பாத்திறர் => விசும்பத்திறர்</u>

விசும்பத்திறர் என்று கடந்த யுகம் வரையிலும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் குறிக்கின்றார்கள். விசும்பு வரை அத்திறம் ஓச்சுவார் இவர். அதாவது, பூமிக்கு மேலே ஐந்தாவது நிலையான விசும்பு வரை இவருடைய அத்திறம் செல்லும். அதற்கு அடுத்த பாழ்வெளி, பரவெளிகளுக்கு இவரது அத்திறம் செல்லாது. அதற்கான முயற்சிகளில் ஈடுபடாமல் விசும்பத்திறர் மண்ணுலக வாழ்க்கைக்கு வந்து விடுகின்றார். **பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டும்தான் மேலே உள்ள ஏழு உலகையும் கடந்து அத்திறங்களைச் செலுத்துவர்.** அதனால்தான், இவர்களை 'ஆச்சாறியார்' என்றும் மற்றவர்களை 'ஆச்சாரியார்' என்றும் அழைப்பர்.

விசும்பாத்திறர் வரலாறு தமிழர் வரலாறு என்பதால் அதை மறைக்க எண்ணியே இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள்; **விசுவாமித்திரர் குதிரைக்குப் பிறந்தவர்** என்று ஆபாசமாகவும், அநாகரீகமாகவும் இழிவாகக் குறித்து விட்டனர். <u>**விசும்பாத்திறர்** என்ற தமிழ்ச் சொல் மறைக்கப்பட்டதால்; தமிழன் அதற்குரிய பொருளை ஆராயவோ, அதற்குரிய வரலாற்றை ஆராயவோ விரும்பவில்லை</u>. விசுவாமித்திரர் என்ற ஆபாசப் பொருள் பொதிந்த வார்த்தையினால் எவ்வளவு பெரிய இழப்பு! **இவ்வாறுதான், சமசுக்கிருதம் தமிழை அழித்தது, அழித்துக் கொண்டிருக்கிறது**.

**//மூலம்: குருதேவர் அறிக்கை 51இல் வெளியான கட்டுரை.//**

# குருபாரம்பரியம் தரும் வசிட்டர் வரலாறு

1) இராமாயண நாயகரான வசிட்டர் வழங்கிய ‘ஞானவாசிட்டம்’ அனைத்துப் 1. புராணங்களுக்கும், 2. காதைகளுக்கும், 3. அறங்களுக்கும், 4. தருமங்களுக்கும், 5. நீதிகளுக்கும், 6. தத்துவங்களுக்கும், 7. சாத்திறங்களுக்கும், 8. நூல்களுக்கும், 9. பூசா விதிகளுக்கும், 10. குருமார் ஒழுக்கங்களுக்கும் (குருமார் ஒழுகலாறுகளுக்கும்), 11. சடங்குகளுக்கும், 12. மரபுகளுக்கும் தாயாக, நாற்றங்காலாக, உலைக்கலமாக இருக்கிறது.

2) இந்த வசிட்டர் சூரிய குலம் காக்கச் சந்திர குலத்திலே தோன்றியவர். இவர் கருவூரர்களின் மரபுப்படி இரவிலேயே அனைத்து அருட்பயிற்சிகளையும், முயற்சிகளையும் செய்தார். இவரது மகன் ‘சத்தி’, பாரம்பரிய மரபை மீறிச் சூரியகுலத்துக்குரிய வண்ணம் காக்கையர் எனப்படும் காகபுசுண்டரின் சூரிய வழிபாட்டை ஏற்றுப் பகலில் அருட் பயிற்சிகளையும் முயற்சிகளையும் செய்தார். இதனால், தந்தை வழியான கருவூரரின் அருட்கலைகளில் முழுமையான தேர்ச்சி பெற முடியாமல் போயிற்று. இதனை உணர்ந்த சூரியகுல விசுவாமித்திரர் அரைகுறைத் தேர்ச்சி பெற்றிருந்த சத்தியை எளிதில் அழித்தார். அதாவது, விசுவாமித்திரருக்கும் வசிட்டருக்கும் (சூரியகுலம் x சந்திரகுலம்) இருந்த பகை இப்படி முடிந்தது.

3) வசிட்டர் தனது மகன் சத்தியை விசுவாமித்திரர் பழமையான பகையால் சூழ்ச்சியாகக் கொன்றதை உணர்ந்தார். இருந்தாலும், தன் மகன் **குல மரபுப்படி** சந்திரனை வணங்கிக் கருவூரர்களின் ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகப் பூசைகளில் தேர்ச்சி பெறாததால்தான்

அழிந்தான் என்பதால் ‘தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை’ என்ற கருத்தின் விளக்கமாகவே மகனின் அழிவு இருக்கட்டும் என்று நிறைவும் நிம்மதியும் அடைந்தார்.

4) வசிட்டர் தன் மகன் சத்தி எதிர்பாராமல் விசுவாமித்திரரால் அழிந்ததால்; அதே நிலை பேரனான **பராாசரனுக்கும்** வந்து விடக் கூடாது என்று பயந்தார். எனவே, உடனே **மைத்திரேயர்** (மையலில் + தரித்தவர் => காதல் மகன்; திருமணத்தால் முறையான இல்லறம் நடத்திப் பிறக்காத மகன்) ஆசிரமத்தில் அருட்பயிற்சிகளைப் பெற்று வந்த பேரன் பராசரனை அழைத்து வந்து “கருவூறார்களால்தான் எதையும் படைக்க முடியும். காகபுசுண்டர்கள் எதையும் காத்து வளர்க்கும் தொழிலுக்கே உரியவர்கள். கருவூறார்கள் இரவு நேரத்தில்தான் படைத்தல் தொழிலுக்குரிய எல்லாவித அருளுலக கல்வி கேள்வி முறைகளையும், கலை வகைகளையும் படைத்தார்கள். இரவில் சந்திரன், மீன், கோள் முதலியவை ஆட்சிதான் வலிமை. எனவே, காக்கையர்கள் பகலில் சூரியனை மட்டுமே வழிபட்டுக் காக்கும் தொழிலைச் செய்கின்றனர். கருவூறார்கள் தாயாக இருந்து ஈன்று தருபவைகளைக் காக்கையர்கள் தந்தையாக இருந்து காத்து வளர்க்கிறார்கள்....” என்ற பேருண்மைகளை விளக்கித் தம்மிடமே விரைந்து அருளுலகக் கல்வி, கேள்வி, கலை முதலிய அனைத்திலும் முறையான பயிற்சிகளால் முழுமையான தேர்ச்சி பெறச் செய்தார்.

5) வசிட்டர், தன் மகனையும், பேரனையும் பிறரிடம் குருகுலக் கல்வி கற்கச் செய்ததுதான் கல்வித்துறை மரபாகப் பதினெண்சித்தர்கள் கூறுவது. ஆனால், எதிர்பாராமல் மகன் ‘சத்தி’ விசுவாமித்திரரை வென்றிடா விட்டாலும்; தன்னை அழிவிலிருந்து காத்துக் கொள்ள முடியாதவனாகப் போய்விட்டானே என்ற வருத்தத்தில்தான் தாமே தமது பேரன் பராசரனுக்கு அனைத்தையும் கற்றுக் கொடுத்தார். இருப்பினும் குருபாரம்பரிய மரபினை மீறக் கூடாது என்பதால்

இவர் சந்திர குலத்தைச் சேர்ந்த புலத்தியரிடம் தம் பேரனே அனுப்பி குருகுல வாழ்வு வாழச் செய்தார்.

6) பராசரர் மைத்திரேயரிடம் வேதம், ஆகமம், சாத்திறம், தோத்திறம், ... முதலியவைகளேக் கற்றதாலும்; புலத்தியரிடம் நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம், நவநாதம், பதினெண்சித்தம், பதினெண்போதம், புராணம், காதை, காப்பியம், ... முதலியவைகளேக் கற்றதாலும்; தனது தாத்தா வசிட்டரிடமே மூன்று வகையான நேம நியம நிடத நிட்டைகளேயும், அத்திறங்களேயும், வாக்குகளேயும், வாசகங்களேயும், படிகளேயும், விதிகளேயும், நூல்களேயும், சாத்திறங்களேயும், ... கற்றதாலும் ... மிகச் சிறந்த **குருபாரம்பரிய வாசகங்களே**ப் பல உகங்களும் விளங்கிடப் படைத்தார்.

**- குருபாரம்பரியம் (Religious History).**

எடுத்துக்காட்டாக இந்த ஒரு வரலாற்றுக் கீற்று எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கருவூரர், காக்கையர் எனும் காகபுசுண்டர் இருவரே சந்திர சூரியராக அருளுலகம் காக்கின்றனர்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கும்மிடிப்பூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இந்த நகலும் சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கோப்புகளிலிருந்து கிடைத்தது.//**

# "சீதையின் கற்பை இராமன் சந்தேகப்படவே இல்லை"

## இ.ம.இ. வெளியீடு

"இலங்கையில் இறந்து போன இராவணனுக்கும் வண்டமர்குழலிக்கும் ஈமக்கடன்களை முன்னின்று செய்தாள் சீதை என்பதால்தான் அவள் தன்னுடைய அரக்க குலத்தின் மீது பற்றும், பாசமும் வைத்திருக்கவில்லை என்பதை உறுதியாகக் கூறி மெய்ப்பிப்பதற்காகத் தன் கணவன் இராமனால் தீக்குளித்து வர ஆணை இடப்பட்டாள். அயோத்தி திரும்பி இராமன் முடிசூட்டு விழா முடிந்து ஏழு (7) மாதங்கள் ஆனபிறகே இராவணன் மகளான சீதையின் வயிற்றில் பிறக்கப் போகும் குழந்தை சூரியகுல அரியணையில் அமரக் கூடாது என்று அரச குடும்பத்தினர் பெரும் குழப்பம் விளைவித்தார்கள்.

வசிட்டர் இராவணனின் அரக்க குலத்தை அவன் வயிற்றில் பிறந்த சீதை அழித்தது போல் சீதையின் வயிற்றில் பிறக்கக் கூடிய குழந்தை சூரிய குலத்தையே அழிக்க நேரிடும் என்று அஞ்சினார். ஆனால், விசுவாமித்திரரோ தன்னை அரசகுருவாக ஏற்றுக் கொள்ள மறுத்த இராவணனை அவன் மகளை வைத்தே அழித்தது போல், தனக்கு முதலிடம் தராமல் வசிட்டருக்கு மட்டும் முதலிடம் தரும் சூரிய குலத்தை அக்குலத்தின் நாயகனாகப் போற்றப் படும் இராமனுக்குப் பிறக்கப் போகும் குழந்தையாலேயே அழித்து விட வேண்டும் என்று முடிவு கட்டினார். வசிட்டருக்கும், விசுவாமித்திரருக்கும் ஏற்பட்ட சண்டை அரிச்சந்திர மகாராசாவோடு முடியாமல் தசரத மகாராசாவின் குடும்பத்திலும் புகுந்து இராமனை முழுமையாக அழிக்கச் செய்து விட்டது.

எனவே, சீதை அரக்கர் குலமகள் என்ற ஒரே காரணத்துக்காகத்தான் இலங்கையில் தீக்குளிக்குமாறு செய்யப் பட்டாள். அயோத்தியின் அரண்மனையில் இருந்து காட்டுக்கு அனுப்பப் பட்டாள். இதைத் தவிர அவளின் கற்பின் மீது சந்தேகம் கொண்டு இராமபிரான் மேற்படிச் சோதனைகளைச் செய்யவில்லை. அதாவது, அரக்கர் குலத்திற்கும், மானுட அரசகுலத்திற்கும் இணைப்பு ஏற்படுவதைத் தடுக்கவே இராமன் சீதையை சோதித்தான்! தண்டித்தான்!”

-- இதற்குரிய ஆதாரங்கள் யோகீசுவரர், மாந்தரீகவல்லி, தாந்தரீகச் சித்தியாளர் என்ற புகழுக்குரிய யக்ஞவல்லி எழுதிய சித்தர் இராமாயணத்திலும், விசுவாமித்திரர் புராணம், வசிட்டர் புராணம், தசரத புராணம், சனகர் புராணம், கௌசிக முனிவர் புராணம், யக்ஞவல்லி புராணம், இராவணன் புராணம், மேகநாதன் புராணம், கும்பகர்ணன் புராணம், வண்டமர்குழலி அரற்றல் (மண்டோதரி அரற்றி), சீதையின் காதை முதலிய பல நூல்களிலும் இருக்கிறது.

**ஆதாரம்:**

குவலய குருபீடம், குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.

**வழங்குபவர்:**

தலைமைப் பொறுப்பாளர்,
இந்து மறுமலர்ச்சி இயக்கம்,
அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம்.

**வெளியிடுபவர்:-**

அருள்மிகு சௌடாம்பிகை அம்மன் சன்னிதானம்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: பெங்களூர் சித்தரடியான் திரு இரா.செ.வேங்கட்டரமணன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல். அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குரு பாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். இவர் இலைமறை காயாகவே சித்தர் இராமாயணத்தை வளர்க்கவும், வாழ்வு பெறவும் செய்திட்டார். ஆனால், பிறமண்ணினரான பிருமணர்கள் என்னும் வடஆரியர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு சித்தர் இராமாயணம் செல்வாக்குப் பெற முடியாமல் செய்து விட்டார்கள்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
Email: indhuism@gmail.com
www.induism.org www.books.gurudevar.org